ஏப்ரல் 7

**மனன வசனம்**

**ராஜா தானியேலை நோக்கி: நீ இந்த மறைபொருளை வெளிப்படுத்தினபடியினால், மெய்யாய் உங்கள் தேவனே தேவர்களுக்கு தேவனும், ராஜாக்களுக்கு ஆண்டவரும், மறைபொருள்களை வெளிப்படுத்துகிறவருமாய் இருக்கிறார் என்றான். தானியேல் 2:47.**

**ஆராய்ச்சிக்கு**

*லூக்கா 16:10; தானியேல் 1; 2; 3:1-6; வெளி 13:11-15; தானியேல் 3:13-18; யோவான் 3:7; தானியேல் 4; 6.*

ஏப்ரல் 7 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

## பாடம் 2

# தானியேலும் முடிவுகாலமும்



ஆதி இஸ்ரவேலருக்கு கர்த்தர் பெரிய திட்டங்களை வைத்திருந்தார். 'நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள்' என்றார் தேவன். யாத் 19:6. யாவேதான் தேவன் என்று இந்த ஆசாரிய ராஜ்யத்தார் இந்த உலகத்திற்குச் சாட்சி பகரவேண்டியிருந்தது. ஏசா 43:10,12. ஆனால், தேவன் அழைத்திருந்த பரிசுத்த அழைப்புக்கு ஏற்றபடி அவர்கள் வாழவில்லை என்பது பரிதாபமானது. கடைசியில், அவர்கள் பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப் போகும் நிலை ஏற்பட்டது.

சிறைப்பட்ட நிலையிலும், யூதேயர்களில் தனி நபர்களை தமக்குச் சாட்சியாகப் பயன்படுத்த தேவனால் முடிந்தது. அதாவது, இஸ்ரவேல்-யூத தேசங்களைவைத்து நிறைவேற்றமுடியாததை, தானியேலும் மூன்று நண்பர்களுமாகிய கைதிகள்மூலம் ஓரளவுக்கு தேவன் நிறைவேற்றினார். 'இஸ்ரவேல் தேசம் எப்படிப்பட்டதாக இருந்திருக்கவேண்டும்? என்ன செய்திருக்கவேண்டும்?' என்பதற்கு இந்த மூவரும் ஒருவிதத்தில் உதாரணமாக இருந்தார்கள்.

கடைசி நாட்களுக்கு வெகுகாலத்திற்குமுன், எங்கோ ஓரிடத்தில் அவர்கள் வாழ்ந்தார்கள்; ஆனால், அவர்களுடைய பண்புகள் கடைசிக்கால மக்களாகிய நமக்கு முன்மாதிரிகளாக உள்ளன. ஏனெனில், அன்று பாபிலோனிய அரசவை மக்கள் தேவனை அறியாதவர்களாக இருந்ததார்கள்; அவர்களைப்போல்தான் இன்றைய உலகம் இருக்கிறது; இவர்கள்முன் தேவனுக்குச் சாட்சியாக வாழவே நம்மைதேவன்அழைத்திருக்கிறார். தானியேல்-அவருடைய நண்பர்கள் வாழ்விலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்ளலாம்?

*2018, ஏப்ரல் 14 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

ஞாயிறு, ஏப்ரல் 8

## கொஞ்சத்தில் உண்மையாயிருத்தல்

*கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும், உண்மையுள்ளவனாயிருக்கிறான்; கொஞ்சத்திலே அநீதியுள்ளவன் அநேகத்திலும் அநீதியுள்ளவனாயிருக்கிறான். லூக்கா 16:10.*

இதில் இயேசுவின் சொற்களைக் கவனியுங்கள். **'கொஞ்சத்திலே அநீதி'** செய்து, அது தவறில்லையென சமரசமாவது எளிது. **'கொஞ்சம்'** என்றால், 'எவ்வளவு என்பது முக்கியம் அல்ல' என்றாகிறது. அதனால்தான் 'கொஞ்சம்' என்கிறார். நம் தனி அனுபவம், அல்லது பிறர் வாழ்வில் ஒன்றை நாம் கவனித்திருப்போம். அதாவது, ஒரு அநீதியில் சமரசமானால், அடுத்த அநீதியில் சமரசம் ஆவோம்; பிறகு இன்னொரு அநீதியில் சமரசம் ஆவோம்; கடைசியில் **'அநேகத்தில் அநீதி'** செய்துவிடுவோம்.

இதை மனதில் வைத்து, தானியேல் 1ஐ வாசிப்போம். பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப்போன அந்த நான்கு நண்பர்கள்பற்றிய முதல் சம்பவம் அதில் சொல்லப்பட்டுள்ளது.

**இஸ்ரவேல் ஒரு தேசமாக எப்படிப்பட்ட தீர்மானத்தைச் செய்திருக்கவேண்டும்? தானியேல், அனனியா, மீஷாவேல், அசரியா ஆகியோர் செய்த தீர்மானம் இதனை எவ்விதங்களில் எல்லாம் வெளிப்படுத்துகிறது? உபா 4:6–8; சக 8:23.**

'ஞானத்தில்' மற்றவர்களைவிட அவர்கள் 'பத்து மடங்குச் சமர்த்தராகக்' காணப்பட்டதற்கு அவர்கள் சாப்பிட்ட ஆகாரம்தான் காரணம் என்று நேரடிக் குறிப்பு இல்லாவிட்டாலும், அந்தக் காரணம் இருப்பது தெளிவாகத் தெரிகிறது. தானி 1:20. தேவனே அவர்களுக்கு ஞானம் கொடுத்தார். அதாவது, பாபிலோனின் அசுத்த உணவுகளைச் சாப்பிட மறுத்து, தேவனுக்கு உண்மையாக இருந்ததால், அவர்கள்மூலமாக தேவன் கிரியைசெய்ய முடிந்தது. அவர்கள் கீழ்ப்படிந்தார்கள்; தேவன் ஆசீர்வாதம் தந்தார். இந்நான்கு வாலிபரும் வேதாகமப்போதனைகளிளின்படி உண்மையோடு நடந்ததுபோல, இஸ்ரவேலர் அனைவரும் இருந்திருந்தால், இதே ஆசீர்வாதத்தை அனைவருக்கும் தந்திருக்கமாட்டாரா? இக்கடைசி நாட்களில் நாம் உண்மையுள்ளவர்களாக வாழ்ந்தால், நம்மையும் ஆசீர்வதிக்கமாட்டாரா?

ஒரு சபையாக நாம் அதிக வெளிச்சமும் சத்தியமும் பெற்றிருக்கிறோம். நாம் ஒரு கேள்வியை நம்மிடம் கேட்கவேண்டும்; 'நாம் பெற்றிருப்பதில் நாம் உண்மையும் கீழ்ப்படிதலும் உள்ளவர்களாக வாழ்கிறோமா?' அதே நேரம், தேவனுக்குப்பலத்த சாட்சிகளாக வாழ்வதற்கு, நாம் தனித்தனியாக எப்படிப்பட்ட தீர்மானங்களை எடுக்கவேண்டும்?

## தானியேலின் மனத்தாழ்மை

ஆயிரக்கணக்கான வருடங்களாக, உலகம்முழுவதிலும் ஏராளமானோர் வேதாகமத்தின் தேவன்மேல் நம்பிக்கை வைப்பதற்கு தானி 2ம் அதிகாரம் காரணமாக இருந்திருக்கிறது. **'தேவன் இருக்கிறார்'** என்பதற்கும், **'அவருக்கு எல்லாம் தெரியும்'** என்பதற்கும் பகுத்தறிவு ரீதியான பலத்த ஆதாரம் அதில் உள்ளது. தேவனுடைய முன்னறிவு அந்த அதிகாரத்தில் வெளிப்படுவதுதான், அவர் இருக்கிறார் என்பதற்கான ஆதாரம்.

**'தேவன் உண்மையிலேயே இருக்கிறார்' என்பதற்கு உறுதியான ஆதாரத்தை தானி 2 எவ்வாறு தருகிறது? ஐரோப்பாவைப்பற்றி மிகச் சரியாக தானியேல் 2:40–43 சொல்வதைக் கவனியுங்கள். 2600 வருடங்களுக்குமுன் வாழ்ந்த ஒருவர், இந்தச் சூழலை அன்று சரியாகச் சொல்லமுடிந்ததானால், தேவனுடைய வெளிப்பாடேயன்றி வேறு காரணம் எதுவும் இருந்திருக்கமுடியுமா?**

---

---

---

தேவன்தாம் அவற்றையெல்லாம் தனக்கு வெளிப்படுத்தினார் என்று எந்த ஒளிவுமறைவும் இல்லாமல் தானியேல் சொல்கிறார். அவர் ஞானவான் என்பதை அங்கிருந்தவர்கள் ஏற்கனவே அறிந்திருந்தார்கள். எனவே, ராஜாவின் கனவையும் அதன் அர்த்தத்தையும் சொன்னதற்கு அவைதாம் காரணமென அவர் தற்பெருமை அடித்திருக்கலாம். ஆனால் தானியேலுக்கு உண்மை தெரியும். அவரும் அவரோடிருந்தவர்களும் ஜெபித்தார்கள். தானி 2:17-23. அவர்கள் முற்றிலும் தேவனையே சார்ந்திருந்தார்கள். இல்லையேல், மற்ற ஞானிகளுடன் சேர்ந்து, அவர்களும் மரித்திருப்பார்கள்.

அரசவை சாஸ்திரிகளும் ஞானிகளும் ஜோசியர்களும் ராஜாவின் கனவைச் சொல்லமுடியவில்லை என்பதை ராஜாவுக்கு தானியேல் பின்னர் ஞாபகப்படுத்துகிறார். மாறாக, பரலோகத்தின் தேவனே மெய்யான ஒரே தேவன் என்பதால், ''அவர்தாம் மறைபொருள்களை வெளிப்படுத்தமுடியும்'' என்கிறார்.

இவ்வாறு, தானியேல் தாழ்மையுள்ளவராக, முற்றிலும் தேவனைச் சார்ந்திருந்தார்; அதனால்தான் தேவனுக்கு பலத்த சாட்சியாகத் திகழமுடிந்தது. அன்று தானியேலே தாழ்மையோடு இருந்திருந்தால், இன்று நாம் எவ்வளவு தாழ்மையோடு இருக்கவேண்டும்? இயேசு நமக்காகச் சிலுவையில் செய்தது தானியேலுக்குத் தெரியாது; ஆனால், நமக்குத் தெரியும். அதை மனதில் வைத்திருந்தால் போதும், நாம் தாழ்மையுள்ளவர்களாக மாறிவிடுவோம்.

தாழ்மைபற்றி சிலுவை நமக்கு என்ன கற்றுத்தரவேண்டும்? நம் பாவநிலைபற்றியும், இரட்சிப்பிற்காக நாம் முற்றிலும் தேவனையே சார்ந்திருப்பதுபற்றியும் சிலுவை நமக்கு உணர்த்துவது என்ன? சிலுவையைத்தவிர வேறு எதையாவது குறித்து நாம் பெருமைபாராட்ட முடியுமா? கலா 6:14.

## பொற்சிலை

தூரா சமவெளியில் மூன்று எபிரெய வாலிபர்கள் சந்தித்த அனுபவம் தானி 3இல் உள்ளது; தேவபிள்ளைகள் கடந்தகாலத்தில் சந்தித்த உபத்திரவங்களையும், இனி சந்திக்கப்போகிற உபத்திரவங்களையும் வெளி 13 சொல்கிறது. இந்த இரு அனுபவங்களுக்கும் சம்பந்தமிருப்பதாக வேத அறிஞர்கள் கருதுகிறார்கள்.

**தானி 3:1–6ஐ வெளி 13:11–15உடன் ஒப்பிடுங்கள். ஒற்றுமைகள் யாவை?**

---

இரண்டிலுமே தொழுகைதான் மையமாக இருக்கிறது; இரண்டிலும், கட்டாயத்தொழுகைபற்றிப் பார்க்கிறோம். தேவனுக்குமட்டுமே உரிய தொழுகை தங்களுக்கு வேண்டும் என்று அரசர்கள் சொன்னார்கள்.

**கடைசி நாட்களில் நமக்கு எப்படிப்பட்ட அனுபவம் உண்டாகும்? அதை நாம் எவ்வாறு எதிர்கொள்ளவேண்டும்? இதைப்பற்றி, தானி 3:13–18 இலிருந்து எவ்வாறு கற்றுக்கொள்ளலாம்?**

---

பூமியிலேயே அதிகாரமிக்க நேபுகாத்நேச்சார் அந்த வாலிபர்களையும் அவர்கள் தேவனையும் ஏளனமாகப் பேசினார்: "உங்களை என் கைக்குத் தப்புவிக்கப்போகிற தேவன் யார்?" என்று கேட்டார். அந்தத் தேவன் யார் என்று சீக்கிரமே அவர் கண்டும்கொண்டார். ஏனெனில், பின்னர் அவர், "சாத்ராக், மோஷாக், ஆபேத்நேகோ என்பவர்களுடைய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர்கள் தங்களுடைய தேவனைத் தவிர வேறொரு தேவனையும் சேவித்துப் பணியாமல், அவரையே நம்பி, ராஜாவின் கட்டளையைத் தள்ளி, தங்கள் சரீரங்களை ஒப்புக்கொடுத்ததினால், அவர் தமது தூதனை அனுப்பி, தம்முடைய தாசரை விடுவித்தார்" என்றார். தானி 3:28.

நடந்த அற்புதம் சாதாரணமானது அல்ல; எனவே, அந்த வாலிபர்கள் சேவித்த தேவன் விசேஷித்தவர் என்று அவர் உறுதியாக நம்பினார்.

அந்த அக்கினிச்சூளையிலிருந்து அவர்கள் விடுவிக்கப்படாமலும் போயிருக்கலாம்; அதை அவர்கள் உணர்ந்தும் இருந்தார்கள். தானி 3:18. "உயிரோடே எங்களை எரித்துக் கொன்றாலும், ராஜாவின் கட்டளைக்கு நாங்கள் கீழ்ப்படிய மாட்டோம்" என்று சொல்லி, சரியானதைச் செய்தார்கள்; அதற்குக் காரணம் என்ன? அவர்களுடைய விசுவாசமும், தங்கள் நம்பிக்கைமேல் அவர்களுக்கு இருந்த உறுதியும்தான்; விளைவுகளைப்பற்றி அவர்கள் பயப்படவில்லை என்பதற்கு ஒரு பலத்த சாட்சியாக அந்தச் சம்பவம் இருக்கிறது.

கடைசிநாட்களில் தொழுகை சம்பந்தப்பட்ட உபத்திரவங்கள் எழும்போது, அவர்களைப் போல நாம் உண்மையுள்ளவர்களாக இருக்க என்ன செய்யலாம்? **'கொஞ்சத்திலே'** உண்மையுள்ளவர்களாக இல்லாவிட்டால், கடைசிநாட்களின் நெருக்கடி போன்ற **'அநேகத்தில்'** உண்மையோடு இருக்கமுடியுமென நினைக்கிறீர்களா?

புதன், ஏப்ரல் 11

## புறஜாதியாரின் மனமாற்றம்

மெய்யான தேவன் உண்டென்றும், அவர் வல்லமையுள்ளவர் என்றும் நேபுகாத்நேச்சார் ஒத்துக்கொள்கிறார். தானியேல் 3. ஆனால், தேவனுடைய வல்லமைபற்றிய தகவலை அறிந்துகொள்வதால்மட்டும், ஒருவன் மறுபடியும் பிறந்துவிட முடியாது. யோவான் 3:7. தானியேல் 3 இல் நேபுகாத்நேச்சார் அறிக்கை செய்தபோதிலும், அவர் அப்போது மனமாறவில்லை என்பதை தானி 4:30 காட்டுகிறது.

**தானி 4:30ஐ வாசியுங்கள். நேபுகாத்நேச்சாரின் பிரச்சனை என்ன? யோவான் 15:5; அப் 17:28; தானி 5:23.**

தானியேல் 4ஆம் அதிகாரம் எப்படி முடிகிறது? மெய்யான வல்லமை உடையவர் தேவன்தாம், அவரில்லாமல் தான் ஒன்றுமே இல்லை என்பதை நேபுகாத்நேச்சார் கஷ்டப்பபட்டு அறிந்துகொண்டார்.

முன்பு அகந்தையோடு இருந்த ராஜா, இப்போது தேவனுடைய தாழ்மையான பிள்ளையாக மாறினார்; கொடுமையான சர்வாதிகாரி உருக்கமான ராஜாவாக மாறினார். பரலோக தேவனை எதிர்த்துத் தூஷணம்பேசியவர், இப்போது உன்னதமானவரின் வல்லமையை ஒத்துக்கொண்டார்; யேகோவாவுக்குப் பயப்படுதலையும், தன் குடிமக்களின் சந்தோஷத்தையும் வளர்க்கமுயன்றார். இராஜாதி ராஜாவும் கர்த்தாதி கர்த்தாவுமானவர் கடிந்துகொண்டதால், எல்லா நிர்வாகிகளும்அறிந்திருக்கவேண்டிய பாடத்தை அவர் கற்றுக்கொண்டார். 'மெய்யான நற்குணத்தில்தான் மெய்யான மேன்மை அடங்கியிருக்கிறது' என்பதுதான் அந்தப் பாடம். யேகோவாவை ஜீவனுள்ள தேவனாக ஏற்றுக்கொண்ட அவர், ''நேபுகாத்நேச்சாராகிய நான் பரலோகத்தின் ராஜாவைப் புகழ்ந்து, உயர்த்தி, மகிமைப்படுத்துகிறேன்; அவருடைய கிரியைகளெல்லாம் சத்தியமும், அவருடைய வழிகள் நியாயமுமானவைகள்; அகந்தையாய் நடக்கிறவர்களைத் தாழ்த்த அவராலே ஆகும்'' என்றார். *EGW, PK, p 521.*

**தேவனைப்பற்றி தானி 4:35இல் தானியேல் கூறும் உண்மைகள் என்ன?**

'எபிரெயர்களின்' தேவனுடைய வல்லமை, ஆளுகை, அதிகாரத்தை ஒரு புறஜாதியான் ஏற்றுக்கொண்டதாக தானி 4 முடிகிறது. ஒருவிதத்தில்ஆதிகாலச் சபையில் நிகழ்ந்த அனுபவத்திற்கு முன்னடையாளமாக இந்தச் சம்பவம் இருக்கிறது. யூதர்களின்சாட்சியாலும்தேவ வல்லமையாலும்தேவனைப்பற்றிய சத்தியத்தை ஆதிச்சபைக்காலத்தில் புறஜாதியார் அறிந்து, புறஜாதியாரும்அந்தச் சத்தியத்தை உலகத்திற்கு அறிவிக்க ஆரம்பித்தார்கள்.

வியாழன், ஏப்ரல் 12

## தானியேலின் உண்மைத்தன்மை

**தானி 6ஐ வாசித்து, பின்வரும் கேள்விகளுக்குப் பதிலளியுங்கள்:**

1. தானியேலின் குணத்தைப்பற்றி தானி 6:4,5 சொல்வது என்ன? நாம் எப்படிப் பட்டவர்களாகக் காணப்படவேண்டும் என்பதுபற்றி இதிலிருந்து நாம் என்ன அறியலாம்?

2. ‘வெளிப்படுத்தலின் கடைசிக்கால நிகழ்வுகளுக்கும் இந்த அதிகாரத்திற்கும் என்ன ஒற்றுமைகள் உள்ளன. வெளி 13:4,8,11–17.

3. தானியேலின் இடத்தில் நீங்கள் இருக்கிறீர்கள் என வைத்துக்கொள்வோம். அன்று வழக்கம்போல ஜெபிக்காமல் இருந்துவிட்டு, அதை எவ்வாறு நியாயப்படுத்தி இருப்பீர்கள்? அதாவது, சிங்கக்கெபிக்கு எவ்வாறு தப்பித்திருப்பீர்கள்?

4. தானியேல் அன்று ஜெபிக்காமல் இருந்திருக்கலாம்; ஆனாலும் வழக்கம்போல தானியேல் அன்று ஜெபித்தது ஏன்?

5. தானியேலைச் சிங்கக்கெபியில் போடுவதற்குமுன்னரே தரியு ராஜா என்ன சொன்னார். தானி 6:16. தானியேலின் தேவனுடைய வல்லமைபற்றி அவர் ஓரளவுக்கு அறிந்திருந்தார் என்பதை அது எவ்வாறு காட்டுகிறது? தான் தொழுதுகொண்ட தேவனைப்பற்றி தானியேல் எப்படிப்பட்ட சாட்சியை ராஜாவுக்கு வெளிப்படுத்தியிருப்பாரென ராஜாவின் வார்த்தையில் வெளியாகிறது?

## மேலும் படிக்க:

“உலக வரலாற்றின் இறுதிக்கட்டத்தை நெருங்குகிறோம்; தானியேல் தீர்க்கதரிசனங்களை விசேஷமாகக் கவனிக்கவேண்டும். வெளிப்படுத்தின விசேஷத்தையும் தானியேல் புத்தகத்தையும்தொடர்புபடுத்திப் படிக்கவேண்டும். இவற்றைப் புரிந்துகொள்ளமுடியாது என்று பலர் நினைக்கிறார்கள்; இது சாத்தானின் வழிநடத்துதல். ஆனால், இந்தத் தீர்க்கதரிசனங்களை ஆராய விசேஷ ஆசி கிடைக்குமென்று வேதாகமம் சொல்கிறது. தானியேலின் தரிசனங்கள்குறித்து, ‘ஞானவான்களோ உணர்ந்துகொள்வார்கள்’ என்று தானியேல் 12:10 சொல்கிறது. நூற்றாண்டுகள் நெடுகிலும் தேவ பிள்ளைகளை வழிநடத்தும்படி, தம் தாசன் யோவான்மூலமாக கிறிஸ்து அருளின வெளிப்படுத்தலில், ‘இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள்’ என வெளி 1:3 சொல்கிறது.” – *EGW, PK, p 547,548.*

தானியேல் புத்தகம் என்றதும், ராஜ்யத்தின் வீழ்ச்சியும் எழுச்சியும், விசாரணையும், இக்கட்டுக் காலத்தில் தேவபிள்ளைகள் இறுதியாக விடுவிக்கப்படுவதும்தான் நம் நினைவுக்கு வரும். தானி 7:22, 26; 8:14; 12:1. ஆனால், உபத்திரவங்கள் எப்போது நேரிட்டாலும் அவற்றை எதிர்கொள்ள தனிப்பட்ட விதத்தில் நாம் எவ்வாறு ஆயத்தமாக இருக்கலாம் என்பதுபற்றியும் தானியேல் புத்தகம் சொல்கிறது. கடைசிக் காலத்திற்கான மிகமுக்கியச் செய்திகளை இந்தப் பகுதிகள் கூறுகின்றன. ‘மிருகத்தின் முத்திரை’, ‘இக்கட்டுக் காலம்’, வரப்போகும் உபத்திரவம் போன்றவற்றை அறிந்திருப்பது முக்கியம்தான்; ஆனால், தேவனோடு நம் அனுபவம் சரியாக இல்லாவிட்டால், இந்த அறிவு நம்மைக் குற்றவாளிகளாகவே தீர்க்கும். எல்லாவற்றிற்கும் மேலாக, தானியேலும் நேபுகாத்நேச்சாரும் மற்றவர்களும் பெற்றிருந்த ‘மறுபிறப்பின்’ அனுபவத்தை நாமும் நிச்சயம் பெற்றிருக்கவேண்டும்.

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *தானியேல் 9:3-19இல் தானியேலின் ஜெபத்தை வாசியுங்கள். நம்முடைய எந்த நற்குணத்தாலும் புண்ணியத்தாலும் அல்ல, தம்முடைய கிருபையால் தேவன் நம்மை நேசித்து, மீட்கிறார் என்பதுகுறித்தும் தானியேல் அறிந்திருந்ததை அந்த ஜெபத்தில் எவ்வாறு காணமுடிகிறது? இந்த உண்மையை அறிந்திருந்தால் மட்டும் போதாது; ஏன் அனுபவித்திருக்கவும் வேண்டும்?*

2. *தேவன் மேலிருந்த தங்கள் நம்பிக்கைகளுக்கு அரசியல் அதிகாரிகள் மிரட்டல் விடுத்தபோது அந்த மூன்று எபிரெய வாலிபர்களும், பின்னர் தானியேலும் சந்தித்த சவால்களை வகுப்பில் கலந்தாலோசியுங்கள். தானி 3; 6. இரண்டு சம்பவங்களிலும் என்ன ஒற்றுமைகள் காணப்படுகின்றன? உண்மையுள்ளவர்களாக வாழ்ந்தால், பலத்த சாட்சிகளாகத் திகழலாம் என்பதை இவற்றிலிருந்து எவ்வாறு அறியலாம்?*

3. **‘மறுபடியும் பிறத்தல்’** *என்றால் என்ன? நாம்* **‘மறுபடியும் பிறக்கவேண்டும்’** *என்று இயேசு ஏன் சொல்லுகிறார்? யோவான் 3:7.*

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்
## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: **போதகர் சாத்ராக் சாமுவேல்,**

**டாக்டர் ஏ. ஜான்சன்**

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்கு

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,
15680 கிலோ ஹெட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

1. **YOUTUBE** க்குப் போய், **Hope TV India**

என்று டைப் பண்ணி, அதில் தெரியும் சின்னத்தை அழுத்துங்கள். HopeChannel INDIA

அதின்கீழ் தமிழ்ப் பகுதியில் ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களைப் பார்க்கலாம்.

2. **YOUTUBE** க்குப் போய், **Tamil Sabbath School**

என்று டைப் பண்ணினால்,
ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களின் மொழிபெயர்ப்பாளர் நடத்தும் பாடங்களைப் பார்க்கலாம்.

---

Translated by *Marshall Isaac and Ezra David*
Printed by *Oriental Watchman Publishing House, Pune.*